IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE,
KATPADI, VELLORE DISTRICT.

Crl.M.P..NO.2758/2022

DEPOSITION OF WITNESS P.W.2

| | | |
|---|---|---|
| NAME | : | GNANASUNDARI |
| HUSBAND'S NAME | : | CHELLADURAI |
| VILLAGE | : | MELMOIL |
| OCCUPATION | : | TEACHER |
| AGE | : | 34 |

Solemnly affirmed in accordance with the provisions of Section 3 and 4 of the Indian Oaths Act 1969, r/w rule 35 and 36 of Criminal Rules of Practice 2019 of the 11th day of July 2023.

**சாட்சிக்கு நீதிமன்ற ஊழியரால் சத்திய பிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் பதிவு செய்யப்படுகிறது.**

**முதல் விசாரணை:**

நான் மேல்மாயில் கிராமத்தில் குடியிருந்து தற்காலிக் ஆசிரியராக வேலை செய்து வருகிறேன். ம.சா.1 எனது மாமியார் ஆவார். எங்கள் பக்கத்து வீட்டில் உள்ள பரமேஸ்வரி மற்றும் முருகன் ஆகியோருக்கும் எங்கள் குடும்பத்திற்கும் இடையே வழிப்பாதை தொடர்பாக பிரச்சனை இருந்து வந்தது. இது சம்பந்தமாக பரமேஸ்வரி காவல் நிலையத்தில் எனது கணவர் மீது புகார் அளித்திருந்தார். அந்த புகாரின் பேரில் விசாரணை செய்வதற்காக கடந்த 26.10.2017 அன்று இரவு 07.00 மணியளவில் கே.வி.குப்பம் காவல் நிலைய போலிசார் காசி மற்றும் பாலாஜி ஆகியோர் எங்கள் வீட்டினிடம் வந்து எனது கணவரின் சட்டையை பிடித்து முதுகின் மீதும் மார்பின் மீதும் அடித்து தள்ளினார்கள். பின்னர் ஞானவேல், ராமமூர்த்தி, சீனிவாசன் ஆகியோர்கள் போலிசாரை விலக்கவிட்டு தாங்களே விசாரணைக்கு காவல் நிலையத்திற்கு என் கணவரை அழைத்து வருவதாக சொல்லி போலிசாரை அனுப்பி வைத்த பிறகு ஞானவேல் எனது கணவரை அழைத்துக் கொண்டு காவல் நிலையம் சென்றார்.

இது சம்பந்தமாக மனித உரிமை ஆணையத்திற்கும் வேலூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளரிடமும் புகார் அளித்தோம். அந்த புகாரின் பேரில் வேலூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் எங்களை அழைத்து பேசினார்கள். பின்பு இது சம்பந்தமாக கே.வி.குப்பம் போலிசார் விசாரணை செய்து எனது கணவரை போலிசார் அடிக்கவில்லை என்று வாக்குமூலம் கொடுக்கும்படி வற்புறுத்தினார்கள். ஆனால் நாங்கள் யாரும் வாக்குமூலம் அவ்வாறு அளிக்கவில்லை. எனவே, கணம் நீதிமன்றம் மேற்படி போலிசார்கள் மீது விசாரணைக்கு உத்தரவிட்டு அவர்களுக்கு தண்டனை பெற்றுத் தருமாறு வேண்டுகிறேன்.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு சாட்சியால் கையொப்பம் செய்யப்பட்டது.

J JAYGANESH Digitally signed by J JAYGANESH Date: 2023.07.11 17:19:47 +0530

நீதித்துறை நடுவர்,
காட்பாடி.